ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

न मेऽपराधः किमकारणं नृणां मद(य्य)भ्यसूयेत्यपि नैव चिन्त्यताम् ।
न यत्र कृता प्राक्भवबन्धनिःसृतिस्ततोऽपराधः परमोऽनुचिन्त्यताम् ॥

என்னுடைய அபராதமொன்றுமில்லையே! அகாரணமாய் ஜனங்களுக்கு என்மீது அஸூயை உண்டாவதேன்? என்று சிந்திக்கவேண்டாம். ஏனெனில் விசாரித்தால் அபராதமில்லாமற் போகாது. முன்னமேயே ஸம்ஸாரபந்தம் விலகிப்போகும்படி செய்துகொள்ளாமலிருப்பதிலிருந்தே பெரிய அபராதம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? இதைச் சாஸ்திரம் சொன்னவாறு ஊஹித்துப்பார்த்து பெரியோர்களுடைய அனுபவத்தையொட்டி அடிக்கடி நன்றாய் சிந்தனைசெய்து பார்க்கவும். கர்மானுஸாரமாக சரீரஸம்பந்தமுள்ளவரையில் பிரியாப்பிரிய ஸம்பந்தம் விலகாது. பிரியாப்பிரிய ஸம்பந்தமுள்ளவரையில் காமக்குரோதாதிகள் விடாது, காமக்குரோதாதிகளுள்ளவரையில் பிரியமாயிருப்பவனிடம் அன்பு பாராட்டுவதும் பகையாளியினிடம் அஸூயைப்படுவதும், ஒழியாது. இது பிரம்மா முதல் புழுக்கள் பரியந்தம் ஸஹஜமாகவே உள்ளது, ஏன் அப்படியென்றால்—சற்றுகவனிக்கவேண்டும். ஒருவன் செய்கிறகார்யம் எவனுக்குஅனுகூலப்படுகிறதோ? அவன் அவனிடம் பிரியப்படுவான். எவனுக்குப் பிரதிகூலமாகப்படுகிறதோ? அவன்அவனிடம் அஸூயைப்படுவான்—ஆத்திரப்படுவான்—என்பது லோகானுபவந்தானே. இவ்வளவுக்கும் மூலகாரணம் சரீரஸம்பந்தமும் ஸம்ஸாரபந்தமுமேயாகும். ஆகவே ஜனங்கள் அஸூயைப்படுவதற்குக் காரணமான ஸம்ஸாரபந்தமிருக்கும்போது "அகாரணமாய் என் அஸூயைப்படுகிறார்கள்" என்று நினைப்பதற்கிடமுண்டா? ஸம்ஸாரபந்தத்தை விடுவித்துக்கொண்டு சரீரஸம்பந்தமுமில்லாமற் செய்துகொண்டிருப்போமானால்—அரூபியாய்—சுயஞ்சோதிச்சுடராய்—ஆனந்தவடிவமாய்நின்றோமானால் நம்மை எவன் காணப்போகிறான்? நம்முடைய எந்தசெயலைக்கண்டு பிரீதியையோ,அப்ரீதியையோஅடையப்போகிறான்? அதனால்அன்பையோ, அஸூயையோ பாராட்டப்போகிறான்? இந்த அற்பங்களையெல்லாம்நாம்தான் எங்கே கவனிக்கப்போகிறோம்? ஒன்றும்நடக்கப்போகிறதில்லை. அப்படிச் செய்துகொள்ளாததோஷத்தால் ஒன்றிலிருந்தொன்றாய் பரம்பரையாகப் பற்பல விபரீதங்கள் தோன்றுகின்றன. காரணமிருந்தால் கார்யமுண்டாவது நியாயந்தானே. விபரீதகார்யம் வேண்டாமென்று நினைப்பவன் அப்படி நினைத்துவிடுவதே அதை வரவொட்டாமல் தடுத்துவிடுமென்றுஅபிப்பிராயப்படுவதுதப்பு. காரணத்தை நிவர்த்திக்க முன்னமேயே வழிதேடவேண்டும், அப்படி வழிதேடி மூலத்தையே நசிப்பித்துவிட்டால் முளையெங்குகிளம்பும். இதைஒருதரம்ஆலோசித்துப்போராது. பன்முறை ஆலோசிக்கவேண்டும். குருட்டுத்தனமாயும் யோசிக்கக்கூடாது. பெரியோரனுபவத்தையொட்டி யோசிக்கவேண்டும் அதையும் தானாகச் செய்துவிடப்படாது. சாஸ்திரம் — ஸதாசாரியன் போதித்தவாறு ஊஹித்துச்செய்யவேண்டும்; அப்படிச்செய்துபார்த்தால் பிறர் அஸூயைப்படுவதற்குள்ள காரணம் நம்மிடத்தில் இருப்பதாகவே தோன்றும். அதை விலக்கிக்கொள்ள புத்திமான் பிரயத்தினம் செய்யவேண்டுமேயன்றி "அவன் அஸூயைப்பட்டானே" என்றுவீண் கவலைப்படக்கூடாது. இப்படித்தன் மனதைக் கட்டுப்படுத்தினவன் சுகத்தையே அடைவான். அப்படி யாவரும் செய்வாராக.

ப—ர்.

ஆர்ய தர்மம்.

ப்ராஜாபதி-ஹூ தை-மீ உஉ

ஸர்வத்தியாகம் ஸுகத்திற்கு ஹேது.

"பணத்தாசையால் பீடிக்கப்பெற்று அதையடையப் பல விதம் முயற்சிசெய்தும், பணம்கிடைக்காவிட்டால் எதைச்செய்து சுகப்படலாம்" என்றால்-"ஸர்வ ஜனங்களிடமும் ஸமபாவனைசெய்வதும் ஆயாஸப்படாமலிருப்பதும், சத்தியம் சொல்லுவதும், ஒழிவடைவதும், ஒன்றுஞ்செய்யாமலிருப்பதும் எவனுக்கிருக்குமோ? அவன் சுகத்தையடைவான். இவ்வைந்து குணங்களும் பெரிய க்ஷேமகரங்களெனப் பெரியோர் சொல்லுவார்கள். இவைகளால் தர்மமும், சுவர்க்கமும், மேலான சுகமும் கிடைக்கும், இங்கு ஓர் இதிஹாஸமுண்டு. மங்கியென்ற பிராமணன் மனம் வெறுத்துச் சொன்னது. மங்கியென்ற பிராமணனொருவன் இருந்தான். அவன் பணத்தில் ஆசைகொண்டு பலதடைவகளாகப் பலவித பிரயத்தினம் செய்தும் பலிக்கவில்லை. அடிக்கடி உற்சாஹபங்கமே வந்தது. கடைசியாக வண்டிவைத்து 'வியாபாரம் செய்து ஏராளமாய்பணத்தைத்தேடிவிடுவோம்—என்று பேராசைகொண்டு ஸ்வல்ப்பம் மிஞ்சியிருந்தபணத்தைக்கொண்டு மாடு வாங்க பெரிய சந்தைக்குச் சென்றான். அங்கு சோதித்துப் பார்த்து நல்ல காளைக்கன்றுகளை வாங்கி இரண்டையும் கழுத்தில் கயிற்றைக்கட்டி சேர்த்துப்பூட்டி, தன் கிராமத்திற்கு ஓட்டிவரும் வழியில் ஒரு ஒட்டகம் படுத்திருந்தது. இரண்டு காளைகளும் ஒட்டகைக்கும் இருபுரத்திலுமாகச் சென்றன. அதன் முகம் தாண்டி முதுகு முண்டில் கயிர்மாட்டிக்கொண்டது. காளைகள் வேகமாய் இழுக்கவே படுத்திருந்த ஒட்டகம் கோபத்துடன் எழுந்திருந்திருந்தது. இரண்டு காளைகளும ஒட்டகத்தின் இரு புறத்திலும் தொங்கிக்கொண்டிருந்தன. அதனால் ஒட்டகம் வெறிகொண்டு வேகமாகத் துள்ளிதுள்ளி ஓடத்தலைப்பட்டது.

காளைகளுக்குக் கழுத்தில் கயறு இருக இருக மென்னையிருக்கி உயிர்துடித்து ப்ராணன்போய்விட்டது. பின்னோடு ஓடின மங்கி என்ற பிராமணன் அதைக்கண்டு களைப்போடு கீழே விழுந்தான். களை நீங்கி உட்கார்ந்துகொண்டு கதறுகிறான். ஐயோ! பாபம்!! என் தலைவிதி இப்படியா முடிந்தது. இனி என்னசெய்வேன். எவ்வளவு சாமர்த்தியசாலியானாலும் தைவ ஸஹாயமில்லாவிடில் தன்னிஷ்டப்படி தனத்தை அடைந்துவிடமுடியாது. சிரத்தையாய் எவ்வளவுசெய்தாலும் பயன்படாது. பூர்வம் நல்ல புண்ணியம் செய்திராவிட்டால் ஒருப்ரயோஜனமில்லை. இந்த உண்மை இப்பொழுதுதான் எனக்குப் புலப்பட்டது. என்னுடைய தைவகதியை என்னவென்று சொல்லுவேன். கையிலிருந்த காசும் தொலைந்துவிட்டது. இந்தக் காளைகளை வாங்காமலிருப்பேனேயாகில் கொஞ்சகாலமாவது காலக்ஷேபம் செய்யலாம். வாங்கினவைகள்தான் வழியாகப் போகக்கூடாதா! ஒட்டகம் துள்ளித்துள்ளிச்செல்லும்பொழுது இருபுறமும் தொங்கவிட்ட மணிகள்போல் தொங்கிக்கொண்டுத் தொண்டையிருகி பிராணனை விட்டனவே. நான்பட்டபாடெல்லாம் வீண்பாடாயிற்றே. தைவ ஸங்கல்ப்பம் பெரிதே தவிர நம்முடைய பிரயத்னத்தில் ஆவது ஒன்றுமில்லை. புருஷகாரம் பிரபலமென்றும், தைவம் துர்பலமென்றும், சொல்லுவது சரியான சித்தாந்தமாயிருக்குமென்று நினைக்கமுடியவில்லை. எங்காவது ஓரிடத்தில் புருஷகாரம் பிடிவாதத்தால் வந்துவிட்டதாகத் தோன்றினாலும், அங்கு அதற்கும் காரணமாக தைவமேமுன்னிற்குமோவென்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது. அதனால் தைவானுகூல்யம் பெறாத நான் ஓய்ந்து ஒழிவடைந்து ஒன்றும்செய்யாமலிருப்பதேதான் சுகம். பணம் தேடுவதில் பேராசை விட்டவனும், ஒழிவடைந்தவனும், கவலையற்று சுகமாய்த் தூங்குகிறான். சுகப்ரும்ம ரிஷி ஜனகமஹாராஜனுடைய அரண்மனைக்கு வந்து காட்டுக்குத் திரும்பிப் போகையில் ஸர்வத்தியாகத்தில் திடமான உறுதியுடன் நல்லதொரு வார்த்தை சொன்னார். அதாவது—

यः कामानाप्नुयात् सर्वान् यश्चैतान् केवलांस्त्यजेत् ।
प्रापणात् सर्वकामानां परित्यागो विशिष्यते ॥

'எவனொருவன் ஸர்வாபீஷ்டங்களையும் ஸாதித்துக்கொள்ளுகிறானோ; எவனொருவன் ஸர்வகாமங்களையும் தியாகம்செய்துவிடுகிறானோ; அவர்களுள் தியாகம் செய்தவனே சிறந்தவன். ஆகவே ஸர்வகாமங்களையுமடைவதைவிட தியாகம்தான் சிறந்தது என்று. காமத்தின் கடைசி எல்லையைக் கண்டவன் யாருமில்லை. சரீரம் ஜீவித்திருக்குமளவும்தானே ஆசைப்படலாம். அதிலும் மூடனுக்கு மேன்மேலும் ஆசை அதிகமாகும். அதனால் யாதொரு பயனுமில்லை. பேராசைபிடித்தவர்களே! கேளுங்கள்!! வீணாய் கடந்து கலங்காதீர்கள். ஆசையை விட்டொழியுங்கள். சாந்தமாயிருங்கள். எவ்வளவோ தடவை ஆசையால் அவமானப்பட்டாய்விட்டதே. போதாதா? இனியாவது ஒழிவடையப்படாதா? நீங்கள் ஓர்புறம் திரவியங்களைத்தேடத்தேட ஓர்புறமாக அவைகள் அழிந்துகொண்டேவருகின்றன. அந்தோ! காமத்தின் ஸாமர்த்தியம் என்னவென்று சொல்லத்தகும். அடா காமமே! விளையாட்டுப் பொம்மைபோல் என்னை ஆட்டிவைத்துவிட்டாயே! அம்மட்டோடா; பிறனுக்கும் தாஸனாகும்படியல்லவா செய்துவிட்டாய். ஆசையென்னும் ஆற்றின் அக்கரையை முன்னோரும் கண்டதில்லையாம். பின்னோரும் காணப்போவதில்லை. நான்மாத்திரமா கண்டுவிடப்போகிறேன்—என்பதாதியாகப் புலம்பிவிட்டு மங்கி என்னும் பிராமணன் ஓர் உறுதிசெய்தான். காமனுக்காளாயிருந்து கண்டபடியெல்லாம் இனி போகத் துணியேன். விழித்துக்கொண்டுவிட்டேன். காமத்தின் 'கொடிய செயல்களைக் கண்டுகொண்டேன். அதை அடியோடு ஒழித்துவிடுகிறேன். அடா! காமா!! உன் ஹிருதயம் வஜ்ரத்தால் அமைக்கப்பட்டதா! ஆயிரக் கணக்கான அனர்த்தங்களில் அடிபட்டும் நூறு பிளப்பாய் ஆகவில்லையே. இப்பொழுது உன்னை நன்றாய்த் தெரிந்துகொண்டுவிட்டேன். உனது பிரியமின்னதென்பதையும் கண்டுகொண்டேன். உன் பிரியத்தைத் தேட முயன்றேனேயாகில் நான் ஆத்தும சுகத்தை ஒருநாளும் அடையப்போவதில்லை. அதனால் உன்னை அடியோடு தொலைத்துத் தலைமுழுகிவிட்டு ஆத்தும சுகத்தையடைய வழிதேடப்போகிறேன். அதற்கு ஸர்வத்தியாகம் தவிர வேறு உபாயமில்லை—என்று மங்கி என்பவர் உறுதிசெய்து அப்படி நடந்து சுகப்பட்டார். அதுபோலவே யாவரும் சுகப்படுவாராக.

பத்திராதிபர்.

புரஞ்சனோபாக்கியானம்.

புரஞ்சனன் வேட்டை

பிராசீனபர்ஹிஸ்ஸுக்கு நாரதர் சொல்லுகிறார். கேளும் அரசே! அந்த புரஞ்சனன் ஒருக்கால் பெரிய வில்லை எடுத்துக் கொண்டு தேரிலேறி வேட்டையாட பஞ்சப்ரஸ்த(ஐந்து தாழ்வரையுள்ள)மென்ற காட்டுக்குச்சென்றான். அவன் ஏறிக்கொண்ட தேர் அப்பொழுதுதான் புதிதாகச் செய்யப்பட்டது. ஐந்து குதிரைகள் கட்டியது. வேகமாகப் போகக்கூடியது. இரண்டு நுகத்தடியுள்ளது. இரண்டு சக்கிரமுள்ளது. அழுத்தமான அச்சுக்கட்டையுள்ளது. மூன்று கொடிமரங்களும், ஐந்து கட்டுகளும், ஒரே கடிவாளமும், ஒரே தேர்பாகனும், அரசன் இருக்கக்கூடிய ஒரே இடமும், இரண்டு நுகத்தடிகட்ட இரண்டு இடமும், உள்ளதாயிருந்தது. அதில் ஐந்து ஆயுதங்கள் வைக்கப் பட்டிருந்தன. ஏழு ஆவரணங்களிருந்தன. அந்தத்தேர் ஐந்துவிதமாக செல்லக்கூடியது. ஸுவர்ணத்தினால் அலங் கரிக்கப்பட்டிருந்தது. அந்தத்தேரிலேறி புரஞ்சனன் தங்கக் கவசம் தரித்து அம்பறுப்பொதியணிந்து ஸேனாபதி ஸேனைகளை முன்னும் பின்னுமாக விட்டுச்செல்ல அந்தக்காட்டுக்குச்சென்றான். அங்கு நாணேற்றி வில்லைவளைத்து அம்புகளைப்பூட்டி வேட்டை யாடத்தலைப்பட்டான். இல்லாளைவிட்டு எப்பொழுதும் இணை பிரியாதவனாயினும் வேட்டையாடுவதிலுள்ள உற்சாஹத்தினால் அவளைவிட்டுப் பிரிந்துவந்தான். ஆஸுரஸ்வபாவத்தையடைந்து கொஞ்சமேனும் கருணையில்லாமல் கொடுமையாகக் கூர்மையுள்ள பாணங்களால் காட்டுமிருகங்களைக் கொன்றான். அரசர்கள் வேட்டையாடி துஷ்ட மிருகங்களைக் கொல்லுவது சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதேயன்றோ! அப்படியிருக்கையில் ஆஸுரஸ்வ பாவம் என்பதாதிசொற்களால் அதில்குற்றம் கூறப்படுவதுபோல் தோன்றுகிறதேயென்றால்—வாஸ்தவந்தான் அது. வேட்டை யாடல் விதிக்கப்பட்டிருந்தாலும் அதில் பல நியமங்களுண்டு. அதற்குக் கட்டுப்பட்டு வேட்டையாடுவது யுக்தமாகும். அதற்கு மீறி வேட்டையாடல் விபரீதமாகும். அன்றியும் வேட்டையாடு வது வேதத்தில் அபூர்வமாக விதிக்கப்படவில்லை. ஆசையினா

லேயே அதில் பிரவிருத்திவந்துவிடுகிறது. இதுபோலவே வேறு காரணங்களால் ஏற்பட்டவை எவையாயினும் அவைகளை வேதம் அபூர்வமாக விதிக்காது. ஆனால் ஆசை முதலிய காரணங்களால் ஏற்பட்ட பிரவிருத்தி அளவுமீறிப்போய்விடப்போகிறதே என்று அதில் பல நியமங்களை வைத்துப் பிரவிருத்தியைக் குறைக்கும். அதற்குத்தான் நியமவிதி என்றுபெயர். இந்த வேட்டையாடு வதிலும், ஆறுவிதமான நியமங்களுண்டு. பொதுவாகப் பிராணி ஹிம்ஸைசெய்யக்கூடாதுதான். மானிடவாழ்க்கையில்ஹிம்ஸையே யில்லாமல் காலம்தள்ள முடியாது. கண்மூடித் திரிந்தாலும் ஸூக்ஷ்மமான பல பிராணிகள் செத்துப்போகின்றனவாம்ஆகவே வீணாகப் பல ஹிம்ஸைகள்நேராமல் புத்திமான் பார்க்கவேண்டும். அதிக ஆசைகொண்டு வேட்டையாடப் பிரவிருத்திக்கும்பொழுது ஹிம்ஸைசெய்யாமல் தீராது என்று வந்துவிட்டால் தேவபிதிரு காரியத்திற்காகத்தான் செய்யலாமென்று முதலாவது நியமம். அதிலும் பெரிய யாகம், அஷ்டகை, ப்ரத்தியாப்திகம் முதலிய பெரிய சிராத்தம் இவைகளில் ஆகலாம். நித்திய சிராத்தம் முத லிய ஸாமான்ய சிராத்தங்களில் கூடாது என்பது இரண்டாவது நியமம். அரசன் தான் செய்யலாமென்பது மூன்றாவது நியமம், நேராகக்கொல்ல வருகின்றவைகளைத்தான் ஹிம்ஸிக்கலாமென்பது நான்காவது நியமம். காட்டில்தான் கொல்லலாமென்பது ஐந் தாவது நியமம். எவ்வளவுவரை வுபயோகமுண்டோ, அவ்வளவு தான் செய்யவேண்டுமென்பது ஆறாவது நியமம். இதுபோல வேதான் மற்ற விஷயபோகங்களிலும் நியமங்களுண்டு. அந்த நியமப்படிதான் விஷயங்களை அநுபவிக்கவேண்டும். கண்ட படி போய்விடலாகாது. இவ்விதமான நியமங்களையெல்லாம் தெரிந்துகொண்டு எந்த மனிதன் நியமங்களுக்குக் கட்டுப்பட்டு கர்மங்களைச் செய்கிறானோ அவன் அந்தக் கர்மலேபத்தை அடை யமாட்டான். ஞான மஹிமையால் கர்மமே ஒட்டாது. நியமங் களுக்குக் கட்டுப்படாமலும், கர்த்திருத்வாபிமானம், பலகாமனை இவைகளுடனும், கண்டபடி கர்மாவைச் செய்வானாகில் பந்தத் திலகப்பட்டு, ரஜோகுண தமோகுணப்பிரவாஹத்தில் விழுந்து பிரக்ஞையில்லாமல் அதோகதியடைவான். ஆகவே வேட்டை யாடுவதிலும் நியமங்களுக்குக்கட்டுப்பட்டு நடந்தால் ஒரு தோஷ முமில்லை. ஸாதுக்களான மிருகங்களை கூர்மையான பாணங்க

ளாலடித்து ஹிம்ஸைசெய்வதைக் கருணையுள்ளவர்கள் காணக் கூடச் சஹிக்கமாட்டார்கள். இவ்விஷயங்களையெல்லாம் நன்ருய்த் தெரிந்துகொண்ட புரஞ்சனன் துஷ்டமிருகங்கள் வலுவிலே வந்ததை வேட்டையாடிக் களைத்துப்போனுன். பசி தாஹம் அதிகமாக வந்துவிட்டது. அதனுல் வேட்டையாடுவதை நிருத்தி பட்டணத்திற்குத் திரும்பினுன். திரும்பிவந்து சிரமபரிஹாரம் செய்துகொண்டு ஸ்னுனம்செய்து நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டு உசிதம்போல் ஆஹாரம்செய்து சயன கிரஹம்சென்று படுத்துக்கொண்டான்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(43-வது பக்கத்தொடர்ச்சி)

चेतनस्तु द्विधा प्रोक्तो जीव आत्मेति च प्रभो ।
जीवा ब्रह्मादयः प्रोक्ता आत्मैकस्तु जनार्दनः ॥
इतरेष्वात्मशब्दस्तु सोपचारः प्रयुज्यते ।

"ஜீவன் பரமாத்மா என்று சேதனன் இரண்டுவிதம். பிரும்மா சிவன் முதலியவர்கள் ஜீவர்கள். நாராயணன் ஒருவரே பரமாத்மா, சிவன் முதலியவர்களிடத்தில் பரமாத்ம சப்தம் ஔபசாரிகமாகக் கூறப்படுகிறது" என்றுதான்கணக்கில்லாமல் வேண்டியவரை தாரா ளமாய்க் கல்ப்பித்துப்போட்டுவைத்திருக்கிற வசனங்களுள் ஓர் வசனத்தையும் பிரமாணம் காட்டி சிவன் முதலியவர்களையும் வேதம், புராணம் முதலியதில் பரமாத்மாவென்றும் ஜகத்காரண மென்றும் கூறியிருக்கிறதே யென்று சங்கித்துக்கொண்டு வேதத்தை உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலியவைகளோடு நன்ருகப் பர்யாலோசனம் தாம் செய்வதுபோல் செய்தால் நாராயணனைத் தவிர மற்றவர்கள் ஜகத்காரணமென்று கூற முடியாதென்றும்,

ऋग्यजुस्सामाथर्वाश्च भारतं पाञ्चरात्रकम् ।
मूलरामायणञ्चैव शास्त्र मित्यभिधीयते ॥

यच्चानुकूलमेतस्य तच्च शास्त्रं प्रकीर्तितम् ।
अतोऽन्यो ग्रन्थविस्तारो नैव शास्त्रं कुवर्त्म तत् ॥
ऋगाद्या भारतञ्चैव पाञ्चरात्र मथाखिलम् ।
मूलरामायणञ्चैव पुराणाञ्चै तदात्मकम् ।
ये चानुयायिनस्त्वेषां सर्वे ते च सदागमाः ।
दुरागमास्तदन्ये ये तैर्नज्ञेयो जनार्दनः ॥

"நான்குவேதங்கள், பாரதம், பாஞ்சராத்திரம், மூலராமாயணம் இவைகளும் இவைகளுக்கு அனுகூலமாயுள்ள மற்ற புராணுதிகளும், சாஸ்திரமென்று சொல்லப்படும். மற்ற சிவ புராணுதி சிவாகமம் முதலியவைகள் வெறும் கிரந்த விஸ்தாரம்தான் சாஸ்திரமன்று. அது குமார்கமாகவுள்ளது. வேதம், பாரதம், பூர்ணமான பாஞ்சராத்ரம், மூலராமாயணம், இவைகளை அனுஸரித்த வைஷ்ணவபுராணங்கள், இவைகளெல்லாம்நல்லஆகமங்கள், இவைகளைத் தவிற மற்ற சிவாகமம்முதலியது துராகமம். அவைகளால்பரமாத்ம தத்துவத்தை அறியக்கூடாது" என்றும்,

ऋग्यजुस्सामाथर्वाश्च मूलरामायण न्तथा ।
भारतं पाञ्चरात्रञ्च वेदा इत्येव शब्दिताः ।
पुराणानि च यानीह वैष्णवानि विदो विदुः ।
स्वतः प्रामाण्य मेतेषां नात्र किञ्चिद्विचार्यते ॥
यद्येपूक्तं न दृश्येत पूर्वकर्मात्रकारणम् ।
नाप्रामाण्यं भवेदेषां दृश्यते ह्यतिकारतः ॥
इतः प्रामाण्यमन्येषां न स्वतस्तु कथञ्चन ।
अदृश्योक्तौ ततस्तेषामप्रामाण्यं न संशयः॥

"ரிக்யஜுஸ்ஸாம, ஆதர்வணம் மூலராமாயணம் பாரதம் பாஞ்சராத்திரம் இவைகளெல்லாமே வேதமென்று சொல்லப்படும். இவைகளுக்கும் வைஷ்ணவங்களான புராணங்களுக்கும் ஸ்வத: பிராமாண்யம் உண்டு. இந்தவிஷயத்தில் விசாரிக்கவேண்டியதில்லை. தீர்மானமே. இவைகளில் சொல்லிய கர்மங்களை அனுஷ்டித்து அதன்படி பலம் கிடைக்காமல் போனுல் அந்தவிடத்தில் கர்மாவைச் செய்தவனுடைய பூர்வகர்மாவே அவ்விதம் பலம் ஏற்படாததற்குப் பிரதிபந்தகமாயுள்ள காரணம். அதனுல் முன்

கூறிய பாஞ்சராத்ரம் மூலராமாயணம் முதலியது அப்பிரமாண மாக ஆகாது. அவன் அதிகாரத்திற்குத் தக்கவாறுதானே பலம் காணப்படும். இவைகளைத்தவிர மற்ற சிவ புராணம், சிவாகமம் சிவன் ஸம்பந்தமாகவுள்ள எந்த கிரந்தங்களானாலும் அவை களுக்கு ஸ்வத: பிராமாண்யம் கிடையாது. அவைகளில் கூறிய கர்மானுஷ்டானத்தினால் பலன் ஏற்படாதவிடத்தில் பூர்வகர்மா காரணமென்று சொல்லக்கூடாது. பின்னையோவெனில் சிவ புராணம் முதலியன அப்பிரமாணங்களென்று அங்கீகரிக்க வேண்டும். இதிற் கொஞ்சங்கூட ஸந்தேஹம் வேண்டாம் என்றும், தன் கொள்கைகளைச் சில சுலோகங்களாகப் பண்ணிப் பிரமாணம் காட்டுவதுபோல் காட்டிச் சிவனைப் பரமாத்மா ஜகத் காரணம் என்று சொல்லும் பிரமாணங்களையெல்லாம் அப் பிரமாணங்களென்று கூறி ஒதுக்கிவிட்டும், சிவபுராணங்கள் பிரும்மாவினால் தமோகுணம் மேலிட்ட அவஸரத்தில் பிரமத் தினால் செய்யப்பட்டன. பிரும்மாவைக்கூறும் புராணங்கள் ரஜோகுணம் மேலிட்ட அவஸரத்தில் செய்யப்பட்டன. விஷ்ணு புராணங்கள் ஸத்துவகுணம் மேலிட்ட அவஸரத்தில் நிதானத் துடன் ஒழுங்காகச் செய்யப்பட்டன—என்று, முமூர்ஷாவஸ் தையில் இருந்துகொண்டு தனக்குப் பிறரிடமிருந்து வரவேண்டிய ரூபாய்களையும் தான் பிறர்களுக்குக் கொடுக்கவேண்டிய ரூபாய் களையும் தனது பையனிடம் சொல்லிவிடுவோமென்று எண்ணி அவனைப்பார்த்துத் தகப்பன் கூறும்பொழுது தனக்கு வர வேண்டிய ரூபாய்களைத் தகப்பனார் சொல்லும்பொழுது அவர் நிதானத்துடன் சொல்லுவதாகப் பிறர்களுக்கு கூறி அவைகளை பாக்கியில்லாமல் எழுதிக்கொண்டுதான் பிறர்களுக்குக் கொடுக்க வேண்டிய ரூபாய்களைத் தகப்பனார் கூறும்பொழுது அது தனக் கிஷ்டமில்லாததால் அவர் நிதானம் தப்பி மயக்கத்தினால் உளறு கிறார் என்றும் பணம் கொடுக்கவேண்டியது வாஸ்தவ மில்லை யென்றும் வரவேண்டியது மாத்திரம் அவர் நிதானத்துடன் சொல்லுவதால் வாஸ்தவமென்றும் தனக்கிஷ்டமானதுபிரமாணம் தனக்கிஷ்டமில்லாதது அப்பிரமாணமென்று கூறும் பையனைப் போல் பிதற்றிக்கொண்டும், வேதத்தில் சிவன், ஈசுவரன், மஹா தேவன், பினாகீ, சர்வன், கிருத்திவாஸஸ், ருத்ரன், ஈசானன் சம்பு, சங்கரன், முதலிய சப்தங்களைக்கூறி ஜகத்காரண வஸ்துவைக்கூறி

னால் அந்த சப்தங்களெல்லாம் விஷ்ணுவைக் கூறும்சப்தங்கள். அதி னால் சிவன் ஜகத்காரணமென்று ஏற்பட்டுவிடாது என்று சிவ னுடைய சப்தங்களையெல்லாம்விஷ்ணுவினுடையதாகக்கூறிவிட்டு

चतुर्मुख श्शतानन्दो ब्रह्मणः पद्मभूरिति ।
उग्रो भस्मधरो नग्नः कपालीति शिवस्य च ॥
विशेषनामानि ददौ स्वकीयान्यपि केशवः ।

"பிரும்மாவுக்குச் சதுர்முகர், சதானந்தர், பத்மபூ என்றும், சிவனுக்கு—உக்ரர், பஸ்மதரர், (சாம்பலைப்பூசிக்கொள்பவர்) நக்னர் (வஸ்திரமில்லாதவர்) கபாலி (மண்டையோட்டைக் கையிலேந்துபவர்) என்றும் விசேஷமான நாமாக்களையும் தனது நாமாக்களையும் விஷ்ணுவானவர் கொடுத்தார்" என்று ஓர் சுலோகம் கவனம் செய்து பிரமாணம் காட்டி ஹேளனமாகத் தான் சில நாமங்களைச் சிவனுக்கு விசேஷநாமங்களாகச் சொல்லி அது வேதத்தில் காரண நிரூபண கட்டங்களில் இல்லாதபடியால் வேதத்திற்குச் சிவன் காரணமென்று சொல்வதில் கருத்தில்லை யென்றும்; இந்த விஷயத்தையே

नानुमानमतच्छब्दात् । नानुमानात्मकागमपरिकल्पितरुद्रोत्र वाच्यः । भस्मधरोग्रत्वादि तच्छब्दाभावात् ।

"அநுமான ரூபங்களான சிவாகமங்களால் கல்பிக்கப்பட்ட ருத்திரன் இங்கு வேதத்தில் கூறப்படவில்லை. ஏனெனில் பஸ் மதரன், உக்ரன் முதலிய சிவனைச்சொல்லும் சப்தங்கள் இவ் விடத்தில் இல்லாதபடியால்" என்று பொருளுடைய பிரும்ம ஸூத்திரம் கூறுகின்றதென்றும்;

पत्युरसामंजस्यात्। पारतन्त्र्येणासमंजसत्वात् न पशुपतिरीश्वरोजगत्कर्ता।

"சுருதிகளில் சிவனை விஷ்ணுவிற்குப் பாதந்திரராகக் கூறியிருப் பதால் சிவன் ஜகத்காரணமென்று கூறுவது ஸமஞ்ஜஸமில்லை" என்று பிரும்மஸூத்திரத்தில் சிவன் காரணமென்பதைக் கண்டித் திருக்கிறதென்றும்;

ब्रह्मेशानादिभि र्देवैर्यत्प्राप्तुं नैव शक्यते ।
तद्यत्स्वभावः कैवल्यं स भवान् केवलो हरे ॥

"பிரும்மா சிவன் முதலிய தேவர்களால் அடையமுடியாத கைவல்யம் ஸ்ரீ நாராயணனுடைய ஸ்வபாவம்" என்றும்; எங்கே

யாவது சிலவிடத்தில் சுருதிகளில் சிவனைக் காரணமாகச் சொன்னாலும் அந்தவிடத்தில்

स्रष्टा पाता च संहर्ता स एको हरि रीश्वरः ।
स्रष्टृत्वादिकमन्येषां दारुयोषावदुच्यते ॥

"ஸிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் இவைகளைச்செய்பவர் விஷ்ணு ஒருவரே. சிவன்முதலிய மற்றவர்களை அவ்விதம் கூறுவது பொம்மலாட்டத்தில் பொம்மையை ஸூத்திரதாரியாயுள்ள வேறொருவன் மறைந்து ஆட்டிவைக்கும்பொழுது அதை அறியாமல் பொம்மை ஆடுகிறது என்று சொல்லுவதுபோல் சொல்லப்படுகின்றது. சிவன் முதலியவர்கள் நிமித்த மாத்திரம். விஷ்ணுவே ஜகத் காரணம்" என்றும்;

उत्पत्ति र्वासुदेवस्य प्रादुर्भावो न चापरः ।
देहोत्पत्तिस्तदन्येषां ब्रह्मादीनां तदीरणात् ॥
देहोऽनादि र्हरेर्नित्यो ब्रह्मादीनामनित्यकः ।
मुख्योत्पत्तिस्तदन्येषां प्रादुर्भावो हरे र्जनिः ॥

"எங்கேயாவது புராணம் முதலியதில் நாராயணனை உண்டானதாகச் சொல்லியிருந்தால் அதற்கு நாராயணன் ஆவிர்பவித்தார் என்று பொருள், அவருக்குச்சரீரம் உண்டானது என்று பொருள் இல்லை. ஏனெனில் விஷ்ணுவினுடைய சரீரமானது அனாதியாகவும் அனந்தமாகவும் உள்ளதன்றோ. ஆகையால் விஷ்ணுவின் உத்பத்தி ஆவிர்பாவரூபமே. பிரும்மா சிவன் முதலியவர்களுடைய சரீரம் அநித்யமென்று சொல்லியிருப்பதால் அவர்கள் உண்டானார்களென்று சொல்லியிருக்குமிடத்தில் ஆவிர்பாவமென்று பொருள் சொல்லாமல் முக்யமாகவே அவர்களுக்குச் சரீரம் உண்டாயிற்று என்றேபொருள் சொல்லவேண்டும்" என்றும்;

ब्रह्मा शिव स्सुराद्या श्च शरीरक्षरणात् क्षराः ।
लक्ष्मीरक्षरदेहत्वादक्षरा तत्परो हरिः ॥
ब्रह्मशेषसुपर्णेशशक्रसूर्यगुहादयः ।
सर्वे क्षरा अक्षरा तु श्रीरेका तत्परो हरिः ॥

"பிரும்மா, சிவன், சேஷன், கருடன், இந்திரன், ஸூர்யன், ஸுப்பிரம்மண்யர் முதலிய ஸகலதேவர்களும் சரீரம் நசிப்பதால் நச்வரர்கள். விஷ்ணுவின் பத்னியாகிய லக்ஷ்மி ஒருவள் நசிக்காத தேஹத்தை யுடையவளாதலால் நசிக்காதவள். அவளுக்கும் மேல்பட்டவர் விஷ்ணு ஒருவரே." என்றும்;

परं ज्योतिः परं ब्रह्म परमात्मादिका गिरः ।
सर्वत्र हरिमेवैकं ब्रूयुर्नान्यं कथञ्चन ॥

"பரஞ்ஜ்யோதிஸ் பரப்பிரும்மம் பரமாத்மா என்பது முதலிய சப்தங்கள் எங்கும் விஷ்ணு ஒருவனைத்தான் சொல்லும், சிவன் முதலியவர்களைச் சொல்லவே சொல்லாது" என்றும்

गच्छन्ति पापिन स्सर्वे नरकं नात्रसंशयः ।
तत्र भुक्त्वा पतन्त्येव ये द्विषन्ति जनार्दनम् ॥
महातमसि मग्नानां न तेषामुत्थितिः क्वचित् ।
इतरेषान्तु पापानामुत्थानं विद्यतेऽपिच ॥

"எவர்கள் விஷ்ணுவைத் துவேஷிக்கின்றார்களோ அந்த பாபிகள் எல்லோரும் நரகத்தையே அடைகின்றார்கள் ஸந்தேஹமில்லை. அந்த நரகத்தில் துக்கத்தை அனுபவித்துவிட்டுப் பிறகும் அதோ கதியையே யடைகின்றார்கள். மஹாதமஸ்ஸில் முழுகின அவர் களுக்கு ஒருஸமயமும் மறுபடி வெளிக்கிளம்புதல் கிடையாது. சிவனை துவேஷிப்பது முதலிய பாபங்களைச் செய்பவர்களுக்கு நரகத்தில் விழுந்தாலும் உடனே வெளிக்கிளம்புதல் ஏற்பட்டு விடும்" என்றும்; சுருதிகளில் ஜகத்காரணத்தைப் பிரதிபாதிக்கும் வாக்யங்களில் விஷ்ணு நாராயணன் வாஸுதேவன் முதலிய சப்தங்களைக் கூறியிருப்பது சிவன் முதலியவர்களிடத்தில் பொருந்தாது என்றும்; சிவன் முதலியவர்களுடைய சப்தம் ஸ்மார்த்தர்களாகிய அஜ்ஞர்களுடைய ரூடியினாலும் கேவலமான யோகத்தாலும் சிவன் முதலியவர்களைச்சொன்னாலும் மத்வர் போலொத்த வித்வான்களுடைய ரூடியினாலும் மஹா யோகத் தாலும் விஷ்ணுவையே சொல்லும் என்றும்; சிவனுடைய சிவத் தன்மை விஷ்ணுவினால் ஏற்பட்டதால் சிவசப்தம் விஷ்ணு வினிடத்தில் பொருந்துமென்றும்; சிவனுக்கு விஷ்ணு அந்தர்

யாமியாயிருப்பதால் சிவசப்தம் விஷ்ணுவைக் கூறுமென்றும்; இதுபோல் மாறி விஷ்ணுசப்தம் சிவனைக் கூறுதென்றும்; சிவாதி சப்தங்கள் சிவன் முதலியவர்களிடத்தில் முக்யமாயிருந்தாலும் விஷ்ணுவினிடத்தில் பரம முக்யமென்றும்; சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் ஸாதாரணமாகச் சொல்லக்கூடிய பிரும்மசப்தம் ஆத்மசப்தம் முதலிய சப்தங்கள் தேவர்களால் உபாஸிக்கப்படுந் தன்மைமுதலிய சிவன் விஷ்ணு இருவர்களுக்கும் ஸாதாரணமான லிங்கங்கள், இவைகளைக்கொண்டே பிரும்மஸூத்திரம் பூராவும் ஒவ்வொரு அதிகரணங்களிலும் விஷ்ணுவே ஜகத்காரணம் சிவன் ஜகத்காரணமன்று என்று ஸித்தித்து விடுகிறதென்றும்; இவ்விதம் மத்வர் தன்னிஷ்டப்படி ஓர் மதத்தைக் கல்பித்துக்கொண்டு அதற்கு வேண்டிய சுருதிஸ்மிருதி புராணம் முதலிய யாவற்றையும் கல்பித்துக்கொண்டுப் பிரமாணம் காட்டிப் பண்டிதர் முதல் பாமரர்வரை யார்கேட்டாலும் கைகொட்டிச் சிறிக்கும்படியான ஆபாஸமான யுக்திகளையும் சொல்லிக்கொண்டு சிவ நிந்தையாலேயே தனது புஸ்தகம் பூராவையும் பூர்த்திபண்ணிக்கொண்டு பிரும்மஸூத்திரங்களையும் கீதையையும் உபனிஷத்துக்களையும் பாரத பாகவதாதி கிரந்தங்களையும் ஆபாஸப்படுத்திவிட்டார்.

பிரும்ம ஸூத்திரம் ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தம் சொல்லிவிட்டு அதற்குப் பிரமாணம் உடனே தாண்டவராய சுருதி மாண்டவராய புராணம் காண்டவராயஸ்மிருதி முதலியதை எடுத்துக்காட்டுகிறார். இதையாரிடத்தில் சொல்லுகிறது. பெரு சுருதிகளையும் பெரு புராணங்களையும் ஊரில்லாததையெல்லாம் காட்டிவிட்டுத்தான் ஸகலவேதங்களையும் ஸகலபுராணங்களையும் அறிந்தவர் என்று எல்லாரையும் பிரமிக்கும்படிச்செய்து தனது சிஷ்யர்களை மத்வர் மயக்குகிறார். இன்னொரு வேடிக்கையைப் பாருங்கள்.

नच लौकिकवाक्यवत् सकर्तृकत्वम् । तस्याकर्तृकत्वप्रसिद्ध्यभावात् । नच केनचित् कृत्वा वेदइत्युक्तं वेदसमं, परंपराभावात् । नच स्वयं प्रतिभातवेदैर्दृष्टमवेदवाक्यं भवति, परंपरासिद्धवेदवाक्यानुसारित्वात् । वेददृष्टॄणामुक्तगुणत्ववाच्च तेषां । उक्तञ्च ब्रह्माण्डे "विंशल्लक्षणतोऽनूनस्तपस्वी बहुवेदवित् । वेदइत्येव थं पश्येत् स वेदो ज्ञानदर्शनात्॥" इति ॥

"வேதத்துக்குக் கர்த்தா இருப்பதாகப் பிரஸித்தி இல்லாததால் கர்த்தா இருப்பதாகப் பிரஸித்தியுள்ள லௌகிகவாக்யம் வேதஸமமாக ஆகிவிடாது. ஒருவன் செய்து இது வேதமென்று சொன்னால் அது வேதஸமமாகி ஆகிவிடுமா? அது வேதம்போல் பரம்பரையாகவரவில்லையல்லவா. ஆனால் ஸ்வயம் ப்ரதிபாத வேதர்களாயுள்ள மஹான்களால் கண்டுபிடிக்கப்பட்டது பரம்பரையில்லாமல்போனாலும் பரம்பரையாய் வரும் வேதவாக்கியத்தை அனுஸரித்திருப்பதால் வேதவாக்கியமாகவே ஆகிவிடும்' அப்பேற்பட்ட மஹான்களுக்கு வேதத்தைக் கண்டுபிடிக்கும் பெரியோர்களுக்குச் சொல்லியிருக்கும் லக்ஷணமிருப்பதால் அவர்கள் சொல்லுவதெல்லாம் வேதமே. பிரும்மாண்டத்தில் இருபது லக்ஷணங்களுக்குக்குறையாமல் உள்ளவராயும் தபஸ்வியாயும் பெருவேதங்களை யறிந்தவராயும் உள்ளவர் வேதம் என்று எதைச்சொல்லுவரோ அது வேதமென்று சொல்லியிருக்கிறது'' என்று மத்வர் தனது கிரந்தத்தில் சொல்லிக்கொண்டு ஸகல லக்ஷணம் பொருந்தியும்எல்லாவேதங்களையுமறிந்ததான்சொல்லும் காடாயனாதி சுருதிகள் முதலியயாவும் பாரம்பரையாய் வாராமல் போனாலும் வேதமென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். அவைகளிலும் வேதத்திற்கு வேண்டிய அடையாளங்கள் அமைத்துத் தன்னால் வேதவாக்யத்தை அனுஸரித்தே செய்யப்பட்டிருப்பதால் என்று தமது சிஷ்யர்களுக்குக்கூறுகின்றார், என்னவிந்தை!

இவ்விதம் சிவனுக்கு ஸகல சுருதி ஸ்மிருதி புராணாதிகளில் கூறியிருக்கும் பெருமைகளையெல்லாம் அறியாது அவரை துவேஷிப்பது கௌதமாதிசாபத்தாலேயே தவிர வேறுகாரணத்தாலில்லை. சிவனைப் பஸ்மதார், நக்னர், கபாலி, உக்ரர் என்று மத்வர் ஹேளனம் செய்கிறாரே. அவருக்குப் புத்திவரும்படி அவராலேயே பாகவததாத்பர்ய நிர்ணயம் என்னும் கிரந்தத்தைச் செய்து பிரமாணமென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிற பாகவதமே ஓர் சுலோகம் கூறுகின்றது. அதைக்கேட்டும் அவருக்குப் புத்தி வரவில்லையென்றால் அதற்கு கௌதமாதி சாபத்தைத்தான் காரணமென்று சொல்லவேண்டும். அந்தச் சுலோகம் வருமாறு—

हसन्ति यस्याचरितं हि दुर्भगा स्वात्मन् रतस्याविदुषस्समीहितम् ।
यैर्वस्त्रमाल्याभरणानुलेपनैः श्वभोजनं स्वात्मतयोपलालितम् ॥

"எவர்கள் வஸ்திரம், மால்யம், ஆபரணம், சந்தனம், போளி, பூரி முதலிய பக்ஷ்யங்கள் ஸூபம் இவைகளால் கடைசியில் ச்வா புஜிக்கப்போகின்ற இந்தச் சரீரத்தை ஆத்ம பாவனையோடு லாளனம் பண்ணுகிறார்களோ அவர்களே ஜகத்து முழுவதும் துச்சம் ஆத்மானந்தமே பெரிது என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக ஸகல வைஷயிக ஸூகங்களையும் வெறுத்து பஸ்மதாரியாய் கபாலியாய் நக்னாய் வைராக்ய சின்னபரிதாய் ஸ்வாத்மானந்தத்தை அனுபவிக்கும் பரமசிவனுடைய அபிப்பிராயத்தை அறியாமல் அவருடைய நடத்தையை ஹேளனம்பண்ணுவார்கள். அவர்கள் துர்பகர்கள் துஷ்டபகோத்பன்னர்கள், அதாவது— ஸங்கீர்ணமான க்ஷேத்திரத்தில் ஜனித்தவர்கள்" என்று சுலோகத்தின் பொருள். இந்த அபிப்ராயத்தாலேயே

यस्य स्यात् पितरि द्वेषाश्शिवे परमकारणे ।
उत्पत्तौ तस्य सांकर्यमनुमेयं विपश्चिता ॥

"எவனுக்கு ஜகத்துக்கெல்லாம் பரமகாரணமாயும், விஷ்ணுவையும் தனக்குப் பார்யையாய்க்கொண்டு சாஸ்தா என்கிற புத்திரனையும் அவரிடம் உண்டுபண்ணி அதனால் ஸகல ஜகத்துக்கும் பிதாவாயும் விளங்கும் சிவனிடத்தில் துவேஷம் ஏற்படுகின்றதோ, அவனுடைய உத்பத்தியில் ஸாங்கர்யம் உண்டு என்பதை அதைக்கொண்டே வித்வானுயுள்ளவன் அனுமானம் செய்யவேண்டும். ஏனெனில் வேறு பீஜத்தாலுண்டானவன்தானே தாயின்ஸொந்தபுருஷனாகிய பிதாவைத் துவேஷிப்பான்" என்று ஸூதஸம்ஹிதையும் கூறுகின்றது. "ஜனங்களுக்கு அந்தர்யாமியாகவும் ஸர்வோத்கிருஷ்டாகவும் விளங்கும் பரமேசுவரனை எவர்கள் ஹிருதயத்தில் தியானம் செய்கின்றார்களோ அவர்கள் ஸஸ்யபரிணாம பூதமான அன்னத்தை நாக்கினால் கிரஹிக்கின்றார்கள் என்கிற அர்த்தத்தைச் சப்தத்தாலும், எவர்கள் குதர்க்கங்களால் சிவனைத் துவேஷித்து தியானம் செய்யவில்லையோ அவர்கள் நாக்கினால் மலத்தையே கிரஹிக்கின்றார்கள் என்கிற அர்த்தத்தை ஆர்த்திகமாகவும் சுருதி கூறுகின்றது. இந்த சுருதியின் அபிப்பிராயத்தையே

अन्तरिच्छन्ति ये रुद्रं सदावन्द्यं मनीषया ।
गृह्णन्ति जिह्वया ते हि रसपूर्णामृतोदकम् ॥

अन्तर्नेच्छन्ति ये रुद्रं भवानीसहितं शिवम् ।
पुरीषमेव गृह्णन्ति जिह्वया ते न संशयः ॥

பராசரமஹர்ஷியும் புராணத்தில் இரண்டு சுலோகங்களால் விளக்கி யிருக்கின்றார். ஆகையால் ஒரே பரமாத்ம வஸ்துவின் மூர்த்தி பேதங்களெனச் சுருதிகளில் வழங்கப்படுபவர்களும் ஹரியும் சிவனும் ஒண்ணு அறியாதவர்வாயில் மண்ணு என்று சிறு குழந்தைமுதல் உலகத்தாரால் வழங்கப்படுபவர்களுமான ஹரி ஹரர்களிடத்தில் வேற்றுமை பாராட்டி பிரும்மா முதலியவர்கள் ஜீவர்கள், பிரும்மாவைவிட சிவன் தாழ்ந்தஜீவன் என்று உளரிக் கொண்டு வேதசாஸ்திர புராணாதிகளின் அபிப்ராயமே இன்ன தென்று அற்பமேனும் அறியாமல் வீண் வாகாடம்பரங்களைச் செய்துகொண்டு மத்வர் தனது ஆயுஸ்ஸைப் பூராவும் வியர்த்த மாக அடித்துச்சில சிஷ்யர்களையும் கெடுத்தது ததீசி முதலிய வர்களின் அவந்தியமான சாபத்தாலேயே தவிர வேறு காரணத் தாலில்லை என்பது யார் குட்டிக்கரணம் போட்டாலும் மாற்ற முடியாத விஷயம். வைஷ்ணவ விசிஷ்டாத்வைத பரமான ஸ்ரீ ராமானுஜ பாஷ்யத்திற்கும் மூலபூதமாயுள்ள சைவவிசிஷ்டாத் வைத பரமான ஸ்ரீ கண்டாசார்ய பாஷ்யத்தில்கூட விஷ்ணுவை ஜீவனென்று ஸ்ரீ கண்டாசார்யாள் கூறவில்லையே, விஷ்ணுவைப் பரமசிவனுடைய சிச்சக்திரூபமாய் ஒப்புக்கொண்டு பரப்பிரும்ம கோடியில் அல்லவா ஸ்ரீ கண்டாசார்யாள் சேர்த்திருக்கிறார்கள். ஸமாஸாபிமானிகளே! பார்த்தீர்களா ஸ்ரீ கண்டாசார்யாளுடைய ஒழுங்களான நடையையும், மத்வருடைய கோணலான நடையை யும். சிவன் விஷ்ணு இவர்களுக்கு உண்மையில் பேதமில்லை என்கிற விஷயத்தை ஹரிஹராபேதம் எனப் பெயர்வாய்ந்த இனி வெளியிடப்படும உபன்யாஸத்தில் விரிவாய்க்காண்க.

(தொடரும்)

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

மநுஸ்மிருதி அத்தியாயம்-1
சில வசனங்கள்.

1. கிருதயுகத்தில் முக்கியதர்மம் தபஸ், திரேதாயுகத்தில் ஞானம், துவாபரயுகத்தில் யக்ஞம், கலியுகத்தில் கொடை என்பது. (86)

2. பிரபஞ்ச ஸம்ரக்ஷணை நிமித்தம் பிராமண முதலானஜாதியார் களுக்கு வெவ்வேறாகக் கடமையும், தொழிலும் ஏற்பட்டிருக் கின்றன. (87)

3. பிராமணர்களுக்கு வேதம் படிப்பது, படிப்பிப்பது, யாகம் செய்வது, செய்விப்பது, யாசிப்பது, யாசகர்களுக்குக் கொடுப்பது கடமையாகும். (88)

4. வேதம்படித்த பிராமணர்கள் உயர்ந்தவர்கள். இவர்களுள் வைதிககர்மங்களின் ஆசாரணையறிந்தவர்கள் மேலானவர்கள், அவர்களிலும் வைதிககர்மங்களை செய்பவர்கள் சிறந்தவர்கள். பிரம்மத்தை அறிந்தவர்கள் அனைவருக்கும் மேலான உத்தமர்கள் (97)

5. வேதம் தெரிந்த பிராமணன் தானும் கவனத்துடன் படிக்கவேண்டும், தன் சிஷ்யர்களுக்கு சரியாக கற்பிக்கவும் வேண்டும். (103)

6, மனுஸ்மிருதி வசனங்களைத் தெரிந்து சரியாக அனுஷ்டிக் கிறவர்களுக்கு திருகாண (மனது, வாக், காயம்) சுத்தியும் ஏற்படும். (104)

7. இப்படிப்பட்ட பிராமணன் தன்னுடன் கூட இருக்கிறவர் களையும தன் குடும்பத்தில் சென்ற ஏழு பித்ருக்களையும், பின்வரும் ஏழு சந்ததிகளையும் சுத்தர்களாகச்செய்வான் அவனே இஹலோக உத்தமனவான். (105)

8. இந்த மானவ சாஸ்திரம் தெரிந்தவனுக்கு சௌக்கியம், அறிவு, கீர்த்தி, நீடியவாழ்வு, மோக்ஷாநந்தம், இவையெல்லாம் உண்டாகும். (106)

9. சிஷ்டா சாரணையற்ற பிராமணன் வேதப்படிப்பின் பயனை யடையான். அவ்வாசாரணையுள்ளவனே பூர்ணபலனையும் அனு பவிப்பான். (109)

10. மதாசாரவிதி நன்னடக்கையைப் பொருத்தது, நன்னடக் கையோ சகல தவத்திற்கும் மேலான ஆதாரம். (110)

R. ஸ்வாமிநாத அய்யர்.

உபதேஸஸாரம்.

(43-வது பக்கத்தொடர்ச்சி)

சரீராத்துமவாதிகளின் கொள்கை.

இவ்வாறு புத்திராத்துமவாதியின் கக்ஷியைக்கேட்டு சரீராத்துமவாதி அதைக்கண்டிக்கிறுன். புத்திரன் தன்னைவிட பிரியனுயிருப்பதாகவும், அதனுல்அவன் பிரதானன் என்பதாகவும்சொல்வது சரியல்ல. புத்திரன் பிரியன் என்பதில் புத்திரன் அதிப்ரியனு? பிரியன் மாத்திரமா? ஸாமான்யமாகப் பிரியனுகமாத்திரமிருப்பவனென்ருல் எப்பொழுதும் பிரியனு? ஏதாவது ஓர் ஸமயத்தில் மாத்திரம் பிரியனு? ஏதோர் ஸமயம் பிரியம் என்ருல் மற்ருேர் ஸமயத்தில் பிரியனில்லையென்ருயிற்றே அப்பொழுது அவன் துவேஷ்யனுகவோ உபேக்ஷிக்கக்கூடியவனுகவோ இருக்கவேண்டும். அப்படியுள்ள வஸ்து நம்மைவிடப் பிரியமாய் இருக்காது. புலி, சிங்கம் முதலிய த்வேஷ்யஜந்துக்களும், வழியில் கிடக்கும் புல் பூண்டு முதலிய உபேக்ஷணீய வஸ்துக்களும் பிரியமாயிருக்கின்றதா? அவைபோல் புத்திராதிகள் த்வேஷிகளாகவோ, உதாஸீனர்களாகவோ இருந்தால் நம்மைவிட பிரியர்களாவார்களா? பிரதானமாகத்தானுவார்களா? புத்திராதிகள் த்வேஷிகளாவார்களாவென்று யோசிக்கவேண்டாம். அதிலும் இந்தக்கலியில் பிதிருத்ரோஹிகளான புத்திரர்களைப் பார்ப்பது அரிதன்று. உதாரணத்திற்குப் பலர் அகப்படுவார்கள். அப்படியிருக்கையில் தன்னைவிட புத்திராதிகள் பிரியர்களென்பது சரியில்லை. பிரியர்களே இல்லையென்னும்போது அதிப்ரியர்களென சொல்ல இடமேயில்லை. ஆகவே பிரதானர்களுமல்ல. ஆனுல் சிலர் புத்திரர்களுக்காகப் பெரியகஷ்டப்படுகிருர்களே! என்ருல் அது அவர்களால் பிந்தி ஒரு காலத்தில் ஆனுகூல்யம் கிடைக்குமோவென்ற பிராந்தியாலாம். ஆனுகூல்யம் கிடைக்காது என்று தோன்றிவிட்டால் எவனுவது பாடுபடுவானு? ஆனுகூல்யம் கிடைக்குமென்று தோன்றினுல் புத்திரனென்ன புலி குட்டிகளையுந்தான் கஷ்டப்பட்டுக் காப்பாற்றுகிருர்கள். ஸர்க்கஸ்காரர்கள் யானை, புலி, சிங்கம் முதலியவைகளைப் பழக்கிப்பாடுபடவில்லையா? அங்கு என்ன சொல்லவேண்டியதாகிறது என்ருல், ஆனுகூல்யம் கிடைக்குமென்ற நினைப்பாலாம் என்றே சொல்லவேண்டியதாகிறது. எதிர்பார்த்தபடி ஆனுகூல்யம் ஏற்படாவிட்டால் கஷ்டப்பட்டுக்

காப்பாற்றிய அவைகளை சுட்டுக்கொன்றுவிடுகிறார்கள். இது ஸர்க்கஸ் குதிரைப்பந்தயம் பார்த்தவர்களுக்கு நன்றாய்த்தெரியும். ஆகவே ப்ரியனென்றும், த்வேஷ்யனென்றும், உபேக்ஷ்யனென்றும் ஆகிறவன் இன்னான்தானென்று குறிப்பிட்டு சொல்லிவிட முடியாது, ஆனால் இலக்ஷணத்தால் வியவஸ்தை செய்துகொள்ள வேண்டும். இக்கருத்து பஞ்சதசியில்—

आत्मा शेष उपेक्ष्यं च द्वेष्यश्चेति चतुर्ष्वपि ।
न व्यक्तिनियमः किन्तु तत्तत्कार्यात्तथा तथा ॥

"ஆத்துமா- அதற்கு சேஷம் உபேக்ஷணீயம் த்வேஷ்யம் ஆகிய நான்கிலுள் இன்னதுதான் இப்படியாகுமென்று வியக்தியைக் குறிப்பிட முடியாது. ஆனால் அந்தந்த கார்யவசத்தால் அப்படி அப்படி தெரிந்துகொள்ளவேண்டும்" என்றும்,

स्याद्व्याघ्रः संमुखो द्वेष्यो ह्युपेक्ष्यस्तु पराङ्मुखः ।
लालनादनुकूलश्चेत् विनोदायेति शेषताम् ॥

"எப்படியெனில் ஓர் புலி நம்மைக்கடித்து தின்றுவிடவெண்ணி எதிர் நோக்கி வருமாயின் த்வேஷ்யமாகிறது. அதுவே பராமுகமாகத்திரும்பிச் செல்லுமாயின் உபேக்ஷணீயமாகிறது. அதையே லாளனைசெய்து அனுகூலமாயிருக்கும்படி செய்துவிட்டால் விளையாட்டு விநோதத்திற்கு ஸாதனமாவதால் பிரியமாகி நமக்கு சேஷமாகிறது. அதாவது உபகாரமாகிறது. அதனால் பிரியமாகிறது" என்றும்,

व्यक्तीनां नियमो माभूत् लक्षणात्तु व्यवस्थितिः ।
अनुकूल्यं प्रातिकूल्यं द्वयाभावश्च लक्षणम् ॥

பிரியாதி விஷயத்தில் வியக்தி நியமம் சொல்லமுடியாவிட்டாலும் இலக்ஷணத்தால் வியவஸ்தை செய்யலாம். 'அதென்னலக்ஷணம் எனில் ஆனுகூல்யம் பிரியத்திற்கும், ப்ராதிகூல்யம் த்வேஷ்யத்திற்கும் இவ்விரண்டுமில்லாமை உபேக்ஷ்யத்திற்கும் இலக்ஷணமாம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வளவால் தன்னைவிட புத்திராதிகள் பிரதானர்கள் என்ற கக்ஷி கண்டிக்கப்பட்டது, பரலோகத்திற்காகப் புத்திரன் வேண்டுமென்று சுருதியிருக்கிறதெனில் இருக்கிறது, அதனால் புத்திரன் பிரதானனாய் விடமாட்டான். கீழ்காட்டிய காரணங்களாமென்க. ஆகையால் புத்திராதிகள் பிரதானர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டிய சுருதி யுக்தி

அனுபவம் இவைகள் ஆபாஸமேயன்றி சரியானவையல்ல. புத்திராதிகளை விட ஆந்தரமான சரீரமே முக்கியமான ஆத்துமா. புத்திராதிகளைப்போல் சரீரம் ஒருபொழுதும் த்வேஷ்யமாகவோ உபேக்ஷ்யமாகவோ ஆவதில்லை. எவனாவது சரீரத்தை உபேக்ஷை செய்கிறுனு? அதற்குவேண்டிய அன்னபானாதிகளைக்கொடுத்து காப்பாற்றுவதாகத்தான் எல்லோரையும் பார்க்கிறோம். சரீரத்தை விட ஆத்மாவேறு என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களும் சரீர போஷணை விஷயத்தில் சரீராத்மவாதிகளைவிட தாழ்ந்துபோக வில்லை. ஆனால் சிலர் உபவாஸாதிகளால் சரீரத்தை உபேக்ஷை செய்கிறார்களே என்றால் அன்னமகப்படாமலிருக்கும். அல்லது பைபித்யம் பிடித்திருக்கும் அப்படியுள்ள ஏதோ சிலரைப்பார்த்து சரீரம் உபேக்ஷிக்கக்கூடியதென நினைத்துவிடக்கூடாது. பெரும் பாலோரைப்பார்த்தல்லவா தீர்மானிக்கவேண்டும். அதுவும் இந் நாளில் அபூர்வமாகச் சொல்லவேண்டியதில்லை. உபேக்ஷை செய் யாமலிருக்கும் பொழுது சரீரத்தில் த்வேஷப்படவா போகிறார் கள் ஆகவே சரீரமே ஆத்துமா. தைத்திரீயம் முதலியசுருதியும் இக்கருத்துக்கிணங்கு நிற்கின்றது. ஊஹித்துப்பார்த்தால் இந்த விஷயம் யுக்தமென்றே தோன்றும். அனுபவமும் "நான் இளைத் தேன் பெருத்தேன், நிற்கிறேன், நடக்கிறேன்;" என்பதாதியாக சரீரமே ஆத்மாவென்பதைத் திடப்படுத்துகிறது. பிரும்மதேவரி டம் வெகுநாள் சிஷ்யனுயிருந்து ஆத்மசொரூபத்தைத் தெரிந்துக் கொண்டு வந்த விரோசனனும் சரீராத்மவாதத்தையேபரவச்செய் தார். பிருஹஸ்பதிபகவானும் இதையே உபதேசித்திருக்கிறார். இந்த வாதத்தில் ஆஸ்திகரெனப்படுவோர் செய்யும் சங்கைகளுக்கு எல்லாம் சரியான சமாதானம் கூறியிருக்கின்றார். அதைஆங்கே காண்க. ஜனகணிதத்திலும் தற்போது சரீராத்மவாதிகளே அதி கம். அதனால் சரீரத்துக்கு வஞ்சனை செய்யாமல் வேண்டியதைக் கொடுத்து காப்பாற்றி வரவேண்டும். கோவில், குளம், புண்யம் பாபம், பரலோகம், நரகம் முதலிய பூச்சாண்டிக்கெல்லாம் பயந்து விடக் கூடாது. கடன்பட்டாலும் நெய்போட்ட சாப்பாடுசாப் பிட வேண்டுமேயன்றி வைக்கோல்மாதிரி வெறும் சோற்றைத் தின்னக்கூடாது. "கண்டதே காக்ஷி கொண்டதே கோலம்" இதுதான் உண்மை. மற்றவாதமெல்லாம் வீண்வாதம். அதை நம்பக்கூடாது. இதுதான் நாஸ்திகமதம். இதில் அனேக பிரிவுகள்

உண்டு. அவற்றுள் சரீராத்மவாதம் முதலாவது வாதம். குண சாலிகள் எல்லாவிடத்திலும் குணத்தையே கிரஹிப்பார்கள். ஆத லால் பாமரத்தன்மையிலிருந்து மேல்பதவியை அடைவதற்குள்ள படிக்கட்டுகளுள் இதை முதலாவதுபடியாக நினைப்பார்கள் ஸர்வாந்தரமான வஸ்துவை கண்டுபிடிக்க மேல்மூட்டத்தைப் பிரித்துவிடுவதுபோல் புத்திராத்மபாவனையை விலக்க இதோர் வழியல்லவா. இவ்வுண்மையையறியாத மூடர்களே இதுகெடுத்து விடும். அப்படிக்கெட்டுப்போகாமல் யாவருமே பாமார்த்த ஸத்தி யத்தை கவனிப்பார்களாக.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

பீஷ்மர்.

1. சந்தநு மஹாராஜன் சந்த்ரவம்சத்தரசன், ப்ரதீபனது புதல்வன். கங்கை மனுஷ்யஸ்திரீ ரூபமெடுத்துவந்தாள். அவளை நீயார்? என்று கேட்காமலே அவளைச் சந்தனு கல்யாணம் செய்து கொண்டான். அவர்களுக்கு ஓர் அழகிய ஆண்குழந்தை பிறந்தது. உடனே அவள் அதைக் கங்கையில் கொண்டு போட்டுவிட்டாள். ஏன் அப்படிச்செய்தாய்? என்றால் அவள் இவனை விட்டுவிடுவாள். ஆகையால் அரசன் பேசாமலிருந்தான்.

2. இப்படி ஏழுகுழந்தைகளைக்கொன்றாள். சந்தனு அது மட்டும் பொறுத்திருந்தான். எட்டாவது குழந்தையைக் கங்கை யில் போடத் தூக்கினாள் சந்தனுவுக்குக் கோபம் வந்துவிட்டது. நீ யார்? என் என் பிள்ளைகளைக் கொல்கிறாய்? என்றுகேட்டான். ப்ருஹ்மலோகத்தில் தனக்கும் அவனுக்கும் வந்த சாபத்தைச் சொன்னாள். எட்டுவஸுக்களுக்கும் வஸிஷ்டர்கொடுத்த சாபத் தையும் சொன்னாள்.

3. ஸுரபி என்ற தக்ஷர் மனைவி, கேட்டதை அளிக்கும் தேனுவைப் பெற்றாள். வஸிஷ்டர் தன் தபோமஹிமையால் அதை ஹோமதேனுவாக அடைந்தார். ஒருஸமயம் எட்டு வஸுக் களும் தங்கள் மனைவியுடன் வஸிஷ்டர் தேனுவைக் கண்டார்கள், த்யோ என்ற வஸு, தன் மனைவியினிடம் அந்த பசுவின் மஹி மையைச் சொன்னார். இதன் பாலைக் குடித்தால் கிழத்தனமே வாராது என்றார்.

4. ஆனல் பூலோகத்தில் ஜிதவதி என்று ஓர் ராணி இருக்கிறாள். அவள் என் தோழி. அவளுக்கு இதைக் கொண்டு கொடுத்தால் கிழவியாகாமலிருப்பாள். ஆகையால் இதைப் பிடித்து தாரும் என்று அவர் மனைவி சொன்னாள். அவளிடத்தில் வைத்திருந்த ஆசையால் த்யோ அதைக்கொண்டுபோனான். அச்சமயம் வஸிஷ்டர் அங்கே இல்லை. அவரில்லாதபோது பசுவைப் பிடித்துப்போவது திருடல்லவா?

5. வஸிஷ்டர் லேசானவரா? திருடனை விடுவாரா? இதை த்யோ யோசிக்கவேயில்லை. ஏன்? பெண்ணாசையால். வஸிஷ்டர் வெளியில் சென்று கந்தமூலங்களுடன் ஆச்ரமத்திற்கு வந்தார். தேனுவைக் காணவில்லை. ஞானதிருஷ்டியால் பார்த்தார். வஸுக்களே கொண்டுபோனார்கள் என்று தெரிந்தது. உடனே கோபம் வந்தது. அவர்கள் மனிதர்களாகப் பிறக்கட்டும் என்று சாபம் கொடுத்தார்.

6. அவர்கள் ஓடிவந்து வஸிஷ்டர்காலில் விழுந்து வேண்டினார்கள். ஒருவருஷத்தில் உங்களுக்கு சாபம்போகும். த்யோ மாத்ரம் வெகுநாளிருப்பர். ஆனல் அவருக்கு ஸந்ததி இருக்காது என்றார். என்று இந்த கதையைச்சொல்லி நீ வேண்டும்போது வருவேன் என்று குழந்தையுடன் கங்கை மறைந்துவிட்டாள்.

7. சந்தனு நற்குணமுடையவன். இவன் ராஜ்யத்தை ஆளும்போது எவருக்கும் எவ்வகையான தீமையும் உண்டாகவில்லை. இவன் ஒருநாள் கங்கைதீரம்போனான். கங்கையில் ஜலம் குறைவாக வருவதைப் பார்த்தான். இதற்கென்ன காரணம் என்று யோசித்தான். இவன் எதிரில் அழகான குழந்தையுடன் ஒரு ஸ்திரீ வந்தாள்.

8. அவளே கங்கை. இவளே அரசனுக்கு மனைவியாக இருந்தவள். அக் குழந்தை அரசனது எட்டாவது பிள்ளை. இதை அரசனிடம் சொல்லி கங்கை இக் குழந்தை வஸிஷ்டரிடம் எல்லா வித்யைகளையும் கற்றுக்கொண்டது. இது உலகில் நல்லபலமும் கீர்த்தியும் உள்ளதாக இருக்கும். இதை அழைத்துப்போ என்று கங்கை மறைந்தாள்.

9. சந்தனு அப்புத்திரனைத்தன் வீட்டிற்கழைத்துவந்தான். பால்யத்திலேயே இவனுக்கு இருக்கும் தைவபக்தி, பித்ருபக்தி, பெரியோரிடம் அன்பு, ஏழைகளிடம் தயை, பொய்சொல்லாமை,

அடக்கம், மரியாதை, இனிமையாகப் பேசுதல், முதலிய குணங்களைக்கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். சந்தனு அவனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவைத்தான். குணமுள்ளவனுக்கு எங்கும் ஸுகம். ஸ்ரீவத்ஸ. சோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

நன்முயற்சி:—20உ சித்பாடி என்ற ஊரில் டாக்டர் எஸ்.டி. மாடியின் தலைமையில் ஓர் பெருங்கூட்டம் கூடிற்று திருப்பதி தேவஸ்தான விஷயமாக சென்னை சட்டசபையில் வரும் சட்டத்தைப்பலமாக பலர் கண்டித்தனர் 21உ. திருப்பதி முனிஸிபல் சபையும் இதைக்கண்டித்து அரசாங்கத்திற்கு தீர்மானம் அநுப்பியது. பல இடங்களில் கூட்டம் போட்டதால் பயனுண்டாகலாம்.

ஸ்ரீ போதேந்தரர் முறை:—கும்பகோணம் வேதபாராயண தர்மபரிபாலன ஸபையார் கோவிந்தராஜபுரம் ஸ்ரீ போதேந்த்ர ஸ்வாமிகள் காட்டியவழியைக் கடைபிடித்து பாபாபநோதினீ என்னும் மஹாமகக்குளத்தைத் தநுர்மாத உஷக்காலங்களில் பஜனையுடன் பிரதக்ஷிணம் செய்து விதிமுறைவழுவாமல் கங்கா பூஜை கங்காதீரேசருக்கபிஷேகாதிகள் ஸதுபன்யாஸம் ப்ராமண ஸந்தர்ப்பணை முதலியவைகளை நடத்தினர். ஸாத்விக பக்தியே மிகச்சிறந்ததர்மம்,

சிறந்த ஆராதனை:—திருக்கோயிலூர் பிநாகிநீ நதிக்கரையில் உள்ள ஸ்ரீ ரகோத்தமஸ்வாமிகள் பிருந்தாவநத்திற்கு சென்றவாரம் ஆராதனை நடைபெற்றது. பல தூரதேசங்களிலிருந்து எண்ணிறந்த பக்தர்கள் வந்தனர். பல வக்கீல்மார்கள் பஜனை கோஷ்டியில் சேர்ந்து பகவத்பஜனை செய்தனர். பல்லாயிரக் கணக்கான ப்ராமணபோஜநம் நடந்தது.

துர்ப்பலவாதம்:—26உ டில்லிசட்டசபையில் விதவைகளுக்குப் புருஷன்சொத்தில் பங்களிக்கவேண்டும் என்று சட்டம்செய்ய வாதம் நடந்தது. அரசாங்கசார்பில் பொதுஜன அபிப்ராயபலம் இருப்பதாகக் காண்பித்தாலொழிய இச்சட்டத்தை அரசாங்கம் ஏற்காதென்றார். இச்சட்டத்திற்கு சாஸ்த்ரபலமும் ஆஸ்திகர்

பலமுமில்லை. ஆயினும் ஆசாரத்தில் மோஹங்கொண்டோர் பலமிருப்பதாகக் காட்டக்கூடும். ஆதலால் ஆஸ்திகர் கூட்டங் கூடி ராஜாபஹதூருக்குப்பலமளித்து இதை ஒழிப்பரோ?

தர்மமும் சேர்ந்தால்:—23உ முதல் த்யாகய்யர்வாள் உத்ஸவம் பலஇடங்களில் கொண்டாடப்பட்டது. சென்னையில் மைலாப்பூர் முத்யால்பேட்டை முதலியவிடங்களிலும் திருவையார் தஞ்சை கும்பகோணம் சிய்யாழி முதலிய இடங்களிலும் நடந்தது குறிப்பிடத்தக்கவை. த்யாகய்யர்வாளைக் கேவலபாடகர் என்றெண்ணியகாலம்போய் பக்தர் என்று உணர்ந்து அதற்கேற்றபடி அவர் உத்ஸவத்தைப் பக்தியோடு கொண்டாடும் காலம் வந்திருக்கிறது. அவர் ஸ்வவர்ணாச்ரம தர்மத்தில் எள்ளளவும் தவராதவர் என்றறிந்து அவரிடம் அன்புகொண்டோரும் அவர்பாட்டால் ஜீவிப்போரும் தர்மாசாரத்தையும் கைக்கொள்ளும்படிவேண்டுகை.

வருஷோத்ஸவம்:— 29உ கோயம்பத்தூரில் ஸ்ரீமான் ஸி. வி. வெங்கட்ரமண அய்யங்கார் இரண்டுலக்ஷம்ரூபாய் தர்மத்திற்காக கொடுத்து நடக்கும் தர்மஸபையின் ஐந்தாவதாண்டு விழா நடந்தது. கல்விக்கும் யாத்ரிகர் அன்னதானத்திற்கும் சிலபாகம் செல்கிறது. மற்றவை தாத்காலிகமாகத்தோன்றி தனக்குத்தோன்றியவழியில் தர்மம்செய்யும் ஸபைகளுக்குச்செல்கிறது. இந்த துகையைக்கொண்டு ஓர் வேதசாஸ்த்ர ஸர்வகலாசாலை போன்ற நிரந்தரமான தர்மம்செய்திருக்கலாம். தர்மம் செய்தவரை பகவான் பலனளிப்பார்.

தர்மத்தை விடாதீர்:—30உ இந்தியமாதர் சங்கம் ஓர் ஸபை கூட்டி கீழ்கண்டதைக்கண்டித்தது. தேசியவிஷயத்தில் தலையிட்ட தலைச்சேரிபெண்ணை மாஜிஸ்டிரேட் சிக்ஷித்தார். ஜெயிலும் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராததுகையை வசூலிக்க அவள் நகைகள் கெழுட்டப்பட்டன. அவள் தாலியையும் பலாத்காரமாக கெழுட்ட அதிகாரி உத்திரவிட்டார். இதைந்யாயமென்று சொல்லவில்லை ஆனாலும் பெண்கள் ஸ்வதர்மத்தை விடக்கூடாதென்றே வற்புறுத்துவோம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.